# சுவடு

J/KOPAY CHRISTIAN COLLEGE

FOR TRUTH & JUSTICE

## வெளியீடு 5

பழைய மாணவர் சங்கம்

யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

கோப்பாய்.

27-12-2005

# கல்லூரிக் கீதம்

வாழிய நம் கலைக் கூடமே வாழ்க.
வாழிய வாழிய வாழியவே.
கனிகள் சூழ்ந்திடு கோவையம் பதியில்
விளங்கு நற் கிறிஸ்தவக்கல்லூரி
உண்மையும் நேர்மையும் உவந்திட அளிக்கும்
உன்புகழ் என்றென்றும் வாழியவே.

(வாழிய)

பல்புகழ் மலிந்திடும் பல பெரியோர்களைப்
படைத்து நற்பணி புரிந்தாய்
அவர் மிகு சேவையை ஏத்திட நன்னிலை
அடைந்த நல்நா டெமதே.

(வாழிய)

மனதினி லூன்றிறம் மதிப்போடு நிலைத்திட
மகிழ்வோடு நாம் முயல்வோம்
கலை பல கவினுறக் கனிந்திட நல்வழி
காட்டிடு வாய் தாயே.

(வாழிய)

நிலமிசை நின்புகழ் நீடு வாழ்க
நின்பணி தொடர்ந்து என்றும் வாழ்க
நிலைபெறு கலைகளின் நிறைகுடமாக
நீயென்றும் வாழிய வாழியவே.

(வாழிய)

# அதிபர் ஆரம்பித்த "சுவடு" இன்று அவருக்கான "சுவடு"

அதிபர் இறந்துவிட்டார். நம்பமுடியவில்லை. ஆனால் நம்பித்தான் ஆகவேண்டும். என் கண் முன் அவர் உருவம். காதில் அவர் குரல். மனதில் அவர் பற்றிய எண்ணம். கல்லூரி சென்றால் அவர் முயற்சியால் எழுப்பப்பட்ட கட்டடங்கள் என் கண்களைக் குளமாக்குகின்றன.

"சுவடு" சஞ்சிகையின் ஆரம்பகர்த்தா. இம்முறை "சுவடில்", அதிபர் மறைவிற்கு எமது அர்ப்பணிப்பு. அதிபர் மற்றவர்களுக்கான "சுவடு" சஞ்சிகையை ஆரம்பித்தார். இம்முறை "சுவடு" அதிபர் அவர்களுக்காகவே நாம் வெளியிடுகின்றோம். அமரத்துவம் அடைந்த அதிபர்கள் தினவிழாவில் வெளிவரும் "சுவடு". இம்முறை அமரத்துவம் அடைந்த அதிபர்கள் வரிசையில் அமரர் திரு. ந. சிவகடாட்சத்தையும் இணைத்து அவரை மையமாக வைத்து அவருக்காகவே வெளிவருகின்றது.

அமரர் அதிபர் ந. சிவகடாட்சம். மறக்க முடியாதவர். மதிப்பிற்கு இலக்கணமானவர். மற்றவர்களை மகிழ்வ்விப்பதில் ஆர்வம் கொண்டவர். அன்னாரது மகத்தான, மதிப்பிடமுடியாத, மட்டற்ற சேவைதனை பேச்சுக்களால் சொல்ல முடியாது. எழுத்துக்களால் எழுதிலிட்டால் மட்டும் போதாது. "சுவடு" சஞ்சிகையின் அச்சாணி. இம்முறை சுவடு சஞ்சிகையின் நாயகன்.

சென்ற வருடம் அமரத்துவம் அடைந்த அதிபர்களுக்கு எம்முடன் இணைந்து அஞ்சலி செலுத்திய அதிபருக்கு இம்முறை அமரத்துவம் அடைந்த அதிபர்கள் வரிசையில் அவரையும் இணைத்து நாம் அஞ்சலி செலுத்துகின்றோம். இப்படி ஒரு நிகழ்வை சென்ற வருடம் எண்ணியிருப்போமா? அதிபர் எண்ணியிருப்பாரா? இன்னும் எத்தனையோ வருடங்கள் வாழ்ந்து சாதனைகள் பலபுரிய வேண்டிய மரம் இடையில் சாய்ந்து விட்டதே? எப்படித்தான் எம்மால் இந்த இழப்பைத் தாங்கமுடியும்.?

அதிபர் ந. சிவகடாட்சம் அவர்கள் அதிபராகக் கடமை புரிந்த காலப்பகுதியில், அவரால் ஒழுங்கு செய்யப்பட்ட ஒவ்வொரு நிகழ்வையும் அன்று கண்ணால் பார்த்தநான் இன்று மனதால் நினைவு கூருகின்றேன். ஒவ்வொரு நிகழ்வையும் நடாத்தும் பொழுதும், அதிபர் செயற்பட்டவிதம் எந்த நிகழ்வுகளையும், நிகழ்களுக்கேற்றவாறு நிர்வகித்த முறை என்னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. அதிபர் அவர்களைப் புரிந்தவர்கள் பலர். புரியாதவர்கள் சிலர் தன்னைப் புரிந்தவர்கள் அதிபரைப் புரிவார்கள். தன்னைப் புரியாதவர்கள் அதிபரைப் புரிந்து கொள்வது கடினம். தன்னைப் பெரிதாக நினைப்பவர் அதிபரைப் பற்றி புரிவது இயலாத காரியம்.

ஆன்மா கண்ணுக்குத் தெரியமாட்டாது. ஆனால் வலிமை மிக்கது. மனிதன் செய்யும் ஒவ்வொரு செயலும் ஆன்மாவில் பதியப்படுகிறது. குற்றம் புரிபவன் தப்பமுடியாது. சக்தியின் வலிமையைப் புரியாதவன் குற்றம் செய்கிறான். வெட்டவெளியில் ஒன்றுமே இல்லை என்று நாம் சொல்லமுடியாது. வெட்ட வெளி வலிமை மிக்கது. சக்தி எங்கும் பரந்திருக்கிறது. கையடக்கத் தொலைபேசி மூலம் வெகுதொலைவில் உள்ள ஒருவரிடம் கதைக்கிறோம். அவர் காரில் போனாலென்ன. கடலில் போனால் என்ன கதைக்கிறோம். குறிக்கப்பட்ட எண்களை அமத்திக் கதைக்கிறோம். இந்த வெளியில் இருக்கும் சக்தியைப் பாருங்கள். தொலைக்காட்சி நிலையத்தில் நடக்கும் நாடகம் உருவம் இல்லாத வெளியால் வந்து உருவமுள்ளதாக தொலைக்காட்சியில் தெரிகிறது. அப்படிப் பட்ட வெளிக்கு எவ்வளவு வலிமை உண்டு. மனிதருக்கு வலிமை இல்லாது இருக்கலாம். ஆனால் வெளிக்கு வலிமை

உண்டு. சுட்டவரை. சுடுவித்தவரைத் தண்டிக்கும் வலிமை வெளிக்கு உண்டு. அதர்மத்துடன் சேர்ந்த மனித வலிமை தற்காலிகமானது. தர்மத்தால் ஏற்படும் வலிமை நிரந்தரமானது.

மாணவர்களின் எதிர்கால வளர்ச்சிக்காக தன்னை அர்ப்பணித்த ஒருவரை ஒரு நொடிப்பொழுதில் சாய்த்துவிட்டனர். ஒரு பக்கத்தில் அவர் குடும்பம் கண்ணீர் விட்டுப் புலம்புகிறது. மற்றொரு பக்கம் அவரது கல்டலூரிக்குடும்பம் கதறி அழுகின்றது. யார் தான் ஆறுதல் கூறுவர்.

நாளெல்லாம் உறக்கமில்லை. ஒன்றாக உறங்கினியோ!
கல்லூரிக்குள் நடந்து நடந்து களைத்துவிட்டாய்
அதனால் நடக்காது விட்டாயோ
மயானத்தை திருத்த வேணுமென்றாய் நீ அங்கு போவதற்கா!
நல்லவர்க்கு இடமில்லை. அதுதான் கலிகாலமா?

இம்மலரின் ஒவ்வொரு இதழும் அதிபரைப் பற்றிய கட்டுரைகள். எழுத்தாளர்களின் எண்ணங்களை கட்டுரை வடிவில் மலாக சமர்ப்பிப்பதில் மகிழ்வு அடைகிறேன். உங்கள் மனதில் அதிபரின் செயல்பாடுகள். சேலை மனப்பான்மை ஆழமாகப் பதியட்டும்.

*ஆசிரியர்*
*எஸ் கே. தங்கவடிவேல்.*

# சிறந்த ஆளுமை மிக்க நிர்வாகி

எனது அன்புக்கும் மதிப்பிற்கும் உரியவராக, என்னுடன் அன்புடனும், பண்புடனும் பழகி எனது சேவையின் வழிகாட்டியாய் ஆலோசகராய் என்னுடன் பழகிய அந்த நாட்கள் என்னால் என்றும் மறக்க முடியாது. ஆசிரியராய், கோட்டகல்வி உதவியாளராய் அவர் ஆற்றிய தன்னலமற்ற சேவையை நான் அதிபராக பணியாற்றிய காலங்களில் என்னால் உணர முடிந்தது. அந்த நாட்களில் கோட்டத்தின் உறுதியான செயற்பாட்டிற்கும் பாடசாலைகளின் சீரான அமைப்பிற்கும் அவர் ஆற்றிய பணிகளில் என்னைப் போன்ற அதிபர்கள் கற்றுக் கொண்ட பாடம் இன்றும் எமது மனதில் பசுமரத்தாணிபோல இருக்கின்றது. 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் கிறிஸ்தவ கல்லூரியின் அதிபர் பதவிப் பொறுப்புக்களை சுமக்கத் தொடங்கிய அமரர் திரு. ந. சிவகடாட்சம் நன்கு திட்டமிட்டு கல்லூரியின் வளர்ச்சியில் அவர் கண்ட கனவு நனவாக முன்னரே, அவர் விதைத்த விதை பயிராகி அறுவடை செய்ய முன்னரே, எம்மை விட்டு கிறிஸ்தவ கல்லூரி அன்னையை தவிக்கவிட்டு நீண்ட தூரம் சென்று விட்டார். எதையும் துணிவுடன் செயல் வடிவம் கொடுக்கின்ற பெருந்தகை. அவருடைய வாழ்க்கை, அவர் தேடியவை, அவருடைய உயிர் உடலை விட்டு பிரியும் வரை சிந்தனையில் இருந்தவை, அவருடைய குடும்ப நலனை விட பாடசாலையின் வளர்ச்சியில், ஏழை மாணவர்களின் கல்வியில் அவர்களுடைய உயர்ச்சியில், கிராமத்து செழிப்பில் அவரின் செயற்பாடுகளாக அமைந்தன. கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் தற்போதைய கோட்டக்கல்வி அலுவலகம் அமைவதற்கும் என்னுடைய பணி செவ்வனே செய்வதற்கும் அவர் ஆற்றிய பணிகள் எழுதி முடிக்கப்படாதவை. அதிகாலை முதல் மாலை வரை கல்லூரிக்காக தன் உடலை பொருள் ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த வள்ளல். நீர் அமைத்த கட்டிடங்கள் இன்னும் உமக்கு நேர்ந்த கதி தெரியாது கம்பீரமாக காட்சி தருகின்றன கல்லூரி வளவில் அமைந்த விருட்சங்கள் அசையாது மௌனம் காக்கின்றன. நீர் நடந்த பாதச் சுவடுகள் கல்லூரி வளாகத்தில் இல்லாத இடமே. இருக்காது. சிரித்த முகத்துடனும் கம்பீர நடையுடன் உலாவி வரும் காட்சி என்றும் மறக்க முடியுமா, உமது வெற்றிடம் கல்லூரிக்கு நிரந்தரமானதாகவே தொடருகிறது. நீர் சமூகத்திற்கும் நாட்டிற்கும் மொழிக்கும் செய் தொழிலுக்கும் ஆற்றிய பணிகள் வரலாறு ஆகின்றது. கல்லூரி உள்ள வரை உமது புகழ் அழியாது. கல்விச் சமூகம் உள்ளவரை உம்மை பற்றி நினைக்காத நாட்கள் இருக்கவே இருக்காது. உமது ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை மனதார வேண்டுகின்றேன்.

*திரு. இ. சிவஞானசுந்தரம்*
*கோட்டக்கல்விப்பணிப்பாளர்,*
*கோட்ட கல்வி அலுவலகம்,*
*கோப்பாய்.*

# பிரதி – அதிபரின் இதயத்தில் இருந்து

அதிபர் தினமாசிய இன்று (27-12-2005) சுவடு

வெளியிடப்படுவதையிட்டு மனம் மகிழ்கின்றேன்.

அமரத்துவ அதிபர்களின் பாதச் சுவடுகள் வழிபல நாம் நடந்து எமது கல்லூரித் தாயை பல்துறை அபிவிருத்தி செய்ய நாம் அனைவரும் முயன்று வந்துள்ளோம்.

நாம் ஆரம்பித்து பல வேலைத்திட்டங்களுக்கு எமது பாடசாலை சமூகம் பல லட்சக்கணக்காண பங்களிப்பை வழங்கி உதவியது. உங்கள் அனைவரின் ஒத்துழைப்புக்கு நன்றியைத் தெரிவித்து எமது கல்லூரி அன்னையின் மேம்பாட்டுக்கு அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

*திருமதி. ம. கயிலைமகாள்*
*பதில் அதிபர்*

# ஆளுமையும் ஆற்றலும் நிறைந்த அதிபர்

"மனிதன் எப்படி வாழ்ந்தான் என்பது முக்கியமானது அல்ல அவன் வாழும் போது சமுதாயத்திற்கு என்ன செய்தான் என்பதே முக்கியமானது"

எமது கல்லூரியின் அன்பிற்குரிய அதிபர் திரு. ந. சிவகடாட்சம் அவர்கள் அடிக்கடி கூறிக்கொள்ளும் அரிய கருத்துக்கள் இன்றும் எமது நெஞ்சில் நிழலாடுகின்றன. கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்திலிருந்து அதிபராகக் கடமையாற்றிய காலம் வரை அவரது சிந்தனைகள் செயல்வடிவம் பெற்றமையைக் கண்கூடாகக் கண்டவர்கள் நாங்கள். ஆளுமையும், தன்னம்பிக்கையும் எண்ணிய கருமத்தை நிறைவேற்றியே முடிக்கும் மனத்துணிவும் அவருடன் பின்னிப்பிணைந்தவை. ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் அவர் காட்டிய அக்கறை அவரது பண்பட்ட மனதிற்கு தக்க சான்றாகும்.

எமது கல்லூரியின் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு கல்விச் செயற்பாட்டையும் இணைப்பாடவிதானச் செயற்பாட்டையும் சமாந்தர நோக்கில் முன்னெடுத்தவர். கல்லூரிக்குத் தேவையான பௌதீக வளங்களைச் சேகரிப்பதில் முனைப்புடன் அவர் செயலாற்றிய முறைகள் அவரது சமூக சிந்தனைக்குச் சான்றாக அமைகின்றது. நூலக அபிவிருத்தி, விளையாட்டு மைதானப் புனரமைப்பு புதிய கட்டடங்களை அமைத்தல், தமிழ்ச்சங்கத்தினூடாக ஆண்டு தோறும் செயல்திட்டங்களை முன்னெடுத்துச் செயற்படுத்தல் ஆகியவற்றை பட்டியல்படுத்திக் கொண்டு செல்லலாம் எமது கல்லூரியில் இன்று அழகுற எழுந்து நிற்கும் கட்டடங்கள் எல்லாம் எமது அதிபரின் புகழைப் பறைசாற்றி நிற்கும் கற்சாசனங்கள், கல்லூரி அன்னைக்கு 150 வது விழாவைச் சிறப்புற நடாத்தி அதன் மூலம் கல்லூரிக்குப் பெருமை தேடித் தந்தவர். ஆசிரியர்களின் தனித்துவ ஆளுமைகளை இனங்கண்டு அவர்களுடைய ஆற்றல்களை பயன்படுத்தும் மதிநுட்பம் நிறைந்தவர். மன்றச் செயற்பாடுகளூடாகத் தலைமைத்துவத்தை மாணவர்களுக்கு வழங்கி அவர்களைச் சமூகத்திற்குப் பொருத்தப்பாடுடையவர்களாக உருவாக்கியவர்.

கல்லூரியின் வளங்கள் அனைத்தையும் சமூகத்திற்கும் பயன்படுத்த மனம் உவந்து வழங்கிய பண்பட்ட மனப்பக்குவம் மிக்கவர். காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை கல்லூரியிலேயே தன்னை இணைத்துச் செயற்பட்டவர். நவீன கல்விச் சிந்தனைகள் நிரம்பப் பெற்ற சிந்தனையாளன். மாணவச் செல்வங்களின் உள்ளார்ந்த திறன்களைப் புடம் போட்டு வெளிக்கொணர பக்க பலமாக நின்றவர். மதி நுட்பமான திட்டமிடலால் எளிதாகவே காரியங்கள் அனைத்தையும் நிறைவேற்றும் ஆற்றல்பெற்றிருந்தார். கற்ற அறிவு, பட்டறிவு இரண்டும் அவரது ஆளுமை விருத்தியை உச்ச நிலைக்கு கொண்டு வந்தது.

சில நேரங்களில் கண்டிப்பும், பல நேரங்களில் சிரித்துப் பேசும் இயல்பும் அவரது பண்புகளாக விளங்கின. நினைத்ததை முடிக்கும் தீவிர மனப்பாங்குடன் தான் செயலாற்றியதைப் போலவே மற்றவர்களும் செயற்படவேண்டும் என்று எண்ணுபவர். சிந்தித்து முடிவு எடுத்தால் அந்த முடிவிலிருந்து அவரை மாற்றுவது கடினமானது.

கணித ஆசிரியராக, விஞ்ஞானப்பட்டதாரியாக இருந்த போதிலும் சகல துறைப்பாடங்களையும் தெரிந்து கொண்டவராக, அப்பாடங்களின் சமாந்தர வளர்ச்சியில் அக்கறை கொண்டவராக விளங்கியவர். கல்லூரிக்கு அவர் ஆற்றிய பணிகள் சொற்களால் வடிக்க முடியாதவை. வானளாவிய மரங்களும் கட்டிடங்களும் மறைந்த அதிபரின் சேவைக்குக் கட்டியம் கூறும். கல்லூரி அன்னை காலமெல்லாம் தன் மைந்தனின் அளப்பரிய சேவையை நன்றியுடன் நினைவு கூருவாள். என்பதில் ஐயமில்லை. "நினைக்கப்பட வேண்டியவர்கள் மறக்கப்படக் கூடாது" என்ற கருத்து எம் மனத்தில் என்றும் எமது அதிபரின் பணியை நினைக்க வைக்கும் எனத் திடமாக நம்புகின்றோம்.

*சி. சிவலிங்கம்*
*பிரதி அதிபர்*
*கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி*

# செயலாளரின் இதயத்திலிருந்து

எமது பழைய மாணவர் சங்கம் அமரத்துவம் அடைந்த அதிபர் தினத்தில் இச் "சுவடு" சஞ்சிகை வெளியீடு - 5 வது வெளிவருவது மிகவும் மகிழ்ச்சிக்குரியது. சுவடுகளைப் பின்பற்றி கல்லூரியை வளர்க்க வேண்டும் என "சுவடு" என்ற சஞ்சிகையை வெளியிட முன்னெடுத்தவர் அமரர் திரு. ந. சிவகடாச்சம் அதிபர். அத்துடன் இவர் கல்லூரி வளர்ச்சியில் அக்கறை கொண்டவர். தான் எண்ணிய திட்டங்களை வகுத்து மற்றவர்களின் ஆலோசனை பெற்று எவ்வித தடைகள் வந்தாலும் நிறைவேற்றுபவர். கல்விச் செயற்பாடுகள், பௌதீக வளங்களைப் பெருக்குதல் இணைப்பாடவிதான செயற்பாடுகள் அபிவிருத்தி என்பனவற்றிற்கு தன்னை முழுமையாக தன்னை அர்ப்பணித்து இரவு பகலாக செயற்பட்டவர்.

கல்லூரி 150 வது ஆண்டு நிறைவு விழா நாயகனாக இருந்து எமது சங்கத்தின் உதவியுடன் வெகுசிறப்பாகக் கொண்டாடி கல்லூரியின் பெருமையை நிலை நாட்டியவர். கல்லூரியில் ஆசிரியர் தினம், நூலக வாரம் என்பன பாடசாலை அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து ஆண்டுதோறும் கொண்டாடுவதுடன் கல்லூரியில் நடைபெறும் சகல நிகழ்வுகளிலும் பங்கேற்று சிறப்பித்து வருகின்றோம்.

இவ்வருடம் ஆசிரியர்தினம், நூலகவாரம் ஒக்ரோபர் மாதத்தில் கொண்டாட நிகழ்ச்சிநிரல் தயாரித்து வைத்தவர். அத்துடன் நவம்பர் மாத முற்பகுதியில் பரிசளிப்புவிழா G.T.X புதிய மாடிக்கட்டிட திறப்புவிழா செய்வதற்கும் உரிய ஒழுங்குகள் செய்ய ஆயத்தப்படுத்திய வேளையில் 11-11-2005 ல் திரு. ந. சிவகடாட்சம் அதிபர் அவர்கள் அகால மரணம் அடைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்து மனவேதனைப்பட்டேன், அன்னாரது இறப்பு கல்லூரிக்கு பேரிழப்பாகும்.

*க. விநாயகலிங்கம்*
*செயலாளர்.*

# சேவையின் சேனாதிபதி திரு. ந. சிவகடாச்சம்

நற்தமிழ் சிறக்கவென நல்லூர் மண்ணில் நடராசா நாகரத்தினம் தம்பதியினரின் புதல்வனாக "சேற்றில் மலர்ந்த செந்தாமரை" போல் பிறப்பெடுத்தார் சிவகடாச்சம். சிறுவயது தொடக்கமே தமிழ்ப்பற்றும், சமயப்பற்றும், இரக்க குணமுள்ளவராகவும் திகழ்ந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை யாழ் பரமேஸ்வராக்கல்லூரியிலும், யாழ் சென்ஜோன்ஸ் கல்லூரியிலும் கற்றுத்தேர்ச்சி பெற்று தனது உயர்கல்வியை கொழும்புப் பல்கலைக்கழகத்தில் பயின்று விஞ்ஞானமணிப் பட்டத்தை பெற்று சேவையின் சின்னமாக பல மாவட்டங்களிலும் விளங்கி இறுதியில் கோவையூரில் மணமுடித்து கோவையம்பதி சிறக்க நற்சிந்தனையாளனாக திகழ்ந்தார்.

1996 இல் கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியின் அதிபர் பதவியை பொறுப்பேற்றவர் தன் குடும்பத்தைப் போலவே கல்லூரியையும் தலைசிறக்கச் செய்தார். கொட்டும் மழையிலும், குமுறும் வெயிலிலும் கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவர்களுக்கென பல பதிய கட்டடங்களை உயரச் செய்தார். மற்றும் கல்லூரியின் கல்விச் செயற்பாடுகளையும், விளையாட்டுத்துறையையும் மாவட்ட மட்டத்திற்கு உயர்த்தி கல்லூரியின் புகழை தேசியத்திற்கு பரம்பச் செய்தார்.

கல்லூரி செயற்பாடுகளில் மட்டும் நின்றுவிடாது தமது ஊர் இளைஞர்களை ஓர் ஒழுக்கமுடைய மனிதர்களாக மண்ணில் வாழ வைப்பதற்காக கோப்பாய் ஐக்கிய கலாச்சார, விளையாட்டுக்கழகத்தை உருவாக்க முன்னோடியாக திகழ்ந்து அதன் போசகராகவும் விளங்கினார். இலட்சியமற்று அங்கலாய்த்த இளைஞர்களை சமூகத்தின் பால் ஈர்த்து ஓர் சமூக சிந்தனையாளனாகவும், சமூக சேவையாளனாகவும் விளங்கி சமூகத்தில் தலை நிமிர்ந்து நடக்கச் செய்தார். விளையாட்டுத்துறையில் ஆர்வம் கொண்ட இவர் நமது கிராம இளைஞர்கள் பிறஇடங்களில் உள்ள இளைஞர்களைப் போல் விளையாட்டில் முன்னேற வேண்டும் என்பதற்காக கிரிக்கெட், உதைப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் போன்றவற்றிற்கு விளையாட்டுத்திடல்களை அமைத்துத் தந்து அதற்கேற்ற விளையாட்டு உபகரணங்களையும் அளித்து எம்மை ஊக்கப்படுத்தினார். எமது கழகத்தின் ஏழை மாணவர்களின் கல்விக்கும், ஏனைய செயற்பாடுகளுக்கும் உந்துசக்தியாக விளங்கியவர். இவரின் சமூகசேவையினைப் பாராட்டி "சமாதான நீதிவான்" பட்டத்தை அரசாங்கம் அளித்தது. அதனூடு நமது கழகத்தவருக்கும், சமூகத்தினருக்கும் தம்மால் இயன்ற உதவிகளை ஆற்றினார். நாம் எந்நேரத்திலும் கையொப்பமிடக்கேட்கும் போது அன்பாகவும் பண்பாகவும் பேசி சிறிதும் தயக்கமின்றி கையொப்பமிடுவார். எமது கழக உறுப்பினர் ஒவ்வொருவரதும் குடும்பப் பிண்னணியை நன்கு அறிந்து அவர்களுக்கு தேவையான உதவிகளையும், அறிவுரைகளையும் வழங்கும் ஓர் அறிஞனாகத் திகழ்ந்தார். சமூகத்தில் தேவையான ஏழை, பணக்காரர்கள், மத பேதங்களை முற்றாக களைந்த கல்விமானாக விளங்கினார்.

எமது கழக உறுப்பினர் ஒவ்வொருவரிலும் நம்பிக்கையும், அன்பும், இரக்கமும் காட்டும் ஓர் தந்தையாகத் திகழ்ந்தார். உதவி என்று கேட்டபோது உவகைச் சிரிப்போடு முழுமனதோடு உடனடியாக செய்து கொழுப்பதில் வல்லவர். இதற்காக தனது சொந்தப் பணத்தையும் செலவிடுவதில் தயக்கம் காட்டமாட்டார்.

இப்படியான சமூக சிந்தனையாளன் சமூக விரோதிகளின் சதி வலைகளுள் அகப்பட்டு தமது மக்களுக்காக ஈற்றில் தனது உயிரையே கொடுத்து இன்று தம் மத்தியில் உத்தமனாகிவிட்டார். இவரது பிரிவு எமது கழகத்திற்கு மட்டுமல்லாது தமது தேசத்திற்கே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு. தமது அதிபரை அழித்ததன் மூலம் அவரின் சிந்தனைகளை அழித்து விடலாம் என சமூக விரோதிகள் ஒரு போதும் கனவு காணக்கூடாது. அழித்து அவரது உடலை மட்டுத்தான் அவரின் உணர்வுகள் நம்மோடு என்றும் வாழும் அதற்கு நாம் எப்போதும் செயல்வடிவம் கொடுப்போம் என்பது உறுதி.

"வாழ்க அதிபர்
வளர்க அவர்தம் திருப்பணிகள்"

***கோப்பாய் ஐக்கிய விளையாட்டு கலாச்சார கழகம்***
***கோப்பாய்.***

# சிந்திப்போமா

"கற்க கசடறக் கற்க" என்பதும் "நிற்க அதற்குத் தக" என்பதும் காலத்தாற் பொய்யாத மொழிகள். பொய்யாமொழியார் கூற்று இன்றைக்கு ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முற்பட்டதாயினும், அதைப் பழமை என்று தட்டிக் கழித்து விட முடியாது. இன்றைய சமுதாயத்துக்கு அதுவும் குறிப்பாக இளைய தலைமுறையினர்க்கு இது எத்துணை அவசியம் என்று சற்றுச் சிந்திப்போம்.

கல்வி என்பது வாழ்க்கைக்கு உணவு தேட வழி வகுக்கும் ஒரு சாதனம் என்ற வகையில் மட்டுமே இன்றைய சமூகம் அர்த்தம் கொள்ளும் போக்கு நிலவுகின்றது. அது ஏட்டுச் சுரைக்காய் போன்று அமைந்து விடக்கூடாது. சுரைக்காயை வரைந்து விட்டால் போதுமா? அது கறிக்கு உதவுமா? எனவே மனிதன் பெறும் கல்வியும் அது போல ஆகி விடாது, நல்வாழ்வுக்கு உதவ வேண்டும். அடக்கமும், நல்லொழுக்கமுமே, கல்வியின் அடையாளங்கள். கல்வி கற்றதன் பயனாக ஒருவருக்கு அடக்கமும் பணிவும் ஏற்படவேண்டும். ஒழுக்கம் இல்லாத வாழ்க்கை வீணான வாழ்க்கையாகக் கொள்ளப்படுகிறது. அடக்கம், சிறந்ததோர் ஆபரணமாகின்றது. "மனித மனம் ஒரு பித்துப் பிடித்த குரங்கு" அதனை நல்வழிப்படுத்தி, நல்ல இயல்புகளைப் பெற்றுக் கொள்ள உண்மையான கல்வி உதவ வேண்டும். கல்வியின் பெறுபேறாக எல்லோரையும் நேசிக்கவும், எப்போதும் சேவை செய்யவும் ஏற்ற மனப்பாங்கு உருவாக வேண்டும். மனிதகுல மேம்பாட்டுக்குரிய பண்புகள் கற்றவர் மத்தியில் விருத்திபெற வேண்டும். நல்லவை பேசி, நல்லவையே செய்யும் உயர்வான உள்ளம் அமைந்திட வேண்டும்.

இத்தகைய இலட்சியப் போக்குகளில் மாணவர் அதிக ஆர்வம் கொண்டவராக இருக்க வேண்டியது அவசியம். இதற்கு இளைய தலைமுறையினர் மாத்திரம் பொறுப்புடையவராக அமைவது கடினம். இன்றைய கணனி யுகத்தில், செவ்வாய்க்கோளுக்குப் பயணிப்பதில் போட்டியிடும் அறிவியல் விருத்தியில், இந்த உபதேசங்கள் எமக்கு எதற்கு? என்று ஒதுக்கிவிடும் போக்கே இன்று பெரிதும் காணப்படுகிறது. கண்மூடித்தனமாக அந்நிய கலாசாரங்களைப் பின்பற்றி எமது தனித்துவமான சமூகப் பழக்க வழக்கங்களை எள்ளி நகையாடியும் வெறுத்து ஒதுக்கியும் நிற்கிறது இன்றைய சமுதாயம். கற்றவை எல்லாம் வெறுமனே பட்டம் பெறுவதற்கும், உழைப்புக்கு அத்திவாரமாக அமைவதற்கும் தான் என்ற ஒரு நிலையே பெரிதும் காணப்படுகிறது. இந் நிலையிலிருந்து நமது சமுதாயம் மீட்சி பெற வேண்டுமாயின் பலதரப்பட்டோரின் மனப்பூர்வமான ஒத்துழைப்பு அவசியம்.

குழந்தைப் பருவத்தில் வீட்டில் பெற்றோர் தத்தம் பிள்ளைகளை நன்னெறிப்படுத்த வேண்டும். "மாதா, பிதா, குரு, தெய்வம்" என்பதைக் குழந்தையின் பிஞ்சு மனதில் பதிய வைத்தல் வேண்டும். "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பதை அறிந்து அவர்களை வணங்கி ஆசி பெறும் வழக்கத்தை நிலைநிறுத்த வேண்டும். இது எமது சமய, சமூகப் பழக்க வழக்கமாயினும் இன்று அருகிவிட்டது. நமது நாட்டில், தென்னிலங்கைப் பகுதியில் இன்றும் இந்த வழக்கம் பெரிதும் காணப்படுகின்றபோதிலும், எமது பகுதிகளில் இது மிக அரிதாகக் காணப்படுவது வருத்தத்துக்குரியதாகும். சமீப காலங்களில் பகவான் ஸ்ரீசத்தியபாபா சமித்தியினரின் மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டத்தின் கீழ், இந்த வழக்கம் சிறு பராயத்தினரிடையே புத்துயிர் பெற்று வருவது மகிழ்ச்சியான காரியமாகும். கண்ணுக்குத் தெரியாத கடவுளைக்காண ஏங்குவதைவிடக் கண்கண்ட தெய்வமாகிய தாய்தந்தையரை வணங்குதல் மிக்க பயனுடையது.

இன்றைய சமூகத்தில் மனிதநேயம் மிகக்குறைந்து விட்டிருக்கிறது. குழந்தை வளர்ந்து, பரந்த சமூகத்தில் உலவ வரும்போது, தன்னுடன் தொடர்புடையவர், தொடர்பற்றவர் என்ற பேதம் ஏதுமின்றி மனிதன் என்ற அடிப்படையில் எல்லோரையும் நேசிக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். இதற்கு அக் குழந்தையின் பெற்றோர் மாத்திரமன்றி, மூத்தோர், மற்றும் ஆசிரியர் யாவருமே வழிகாட்டிகளாக அமைவது நன்மையான காரியமாகும். பொது இடங்களிலோ, போக்குவரத்து வாகனங்களிலோ தம்மிலும் மூத்தவர்களையோ, நோய் வாய்ப்பட்டவர்களையோ காணுமிடத்து அவர்களுக்கு உதவும் சேவை மனப்பான்மையை வளர்க்க வேண்டும். இன்முகங்காட்டி, இன்சொற்பேசி, அன்பாகவும் பண்பாகவும் வாழப்பழகிக் கொள்ள வேண்டும். இனிய உளமாக இன்னாத பேசுதல் ஆகாது. இவை யாவும் வளரும் பருவத்தில் குறிப்பாக மாணவப் பருவத்தில் ஒரு பிள்ளை பழகிக் கொள்ள வேண்டிய காரியங்கள். இவை பாடசாலைகளில் கற்பித்தலுடன் சேர்த்துப் புகட்டப்படுவது பயனுடையதாகும். கல்விச் சமூகம் இவற்றைக் கருத்திற்கொண்டு செயற்பட்டால் மனிதகுல மேம்பாட்டுக்கு உதவமுடியும்.

பாடசாலைப்பருவத்தில் குழந்தைகள் கற்றுக் கொள்ள வேண்டிய நல்லதொரு பண்பு நன்றியறிதல் இக்காலத்தில் இப் பண்பும் வெகுவாகக் குறைந்துவிட்டது. இப்பண்பு ஒருவனிடம் இல்லையேல், அம் மனிதனைவிட நாய் மேலானதாகிவிடுகிறது எனவே ஆறு அறிவு மனிதனிடம் நிச்சயமாக இப்பண்பும் மேலோங்க வேண்டியது ஒன்றாகும். பெற்றதாய், பிறந்த பொன்னாடு, கற்ற பாடசாலை என்று யாவற்றுக்கும் நன்றியுடையவராக இருத்தல் நல்ல பண்பாகும். சிலர், பாடசாலையில் கற்று நல்ல நிலைக்கு வந்தவுடன், அப் பாடசாலை பற்றிய நன்றியுணர்வே இல்லாதவராகிவிடும் நிலை மனவருத்தமான விஷயம். பாடசாலை எனக்கு என்ன செய்தது? நான் ஏன் அதற்கு நன்றி கூற வேண்டும் என்று சொல்பவர் பலருள்ளனர். அத்தகைய மனப்பாங்கை நீக்கி நன்றியுணர்வை வளர்க்க வேணும். "நான் பாடசாலைக்கு என்ன செய்தேன்" என்று தத்தம் மனதினை வினவ வேண்டும். ஒருவரின் நற்குண நற்செய்கைகளைப் பார்த்து மதிப்பவர் அவரை எங்கே படித்தாய் எனக் கேட்பது இயல்பு மறுதலையாக இருப்போரையும் அவ்வாறு கேட்பது இயல்பு எனவே எமது நன்மைக்கும், குறைபாட்டுக்கும் பொறுப்பேற்கும் பாடசாலைக்கும் நன்றி பாராட்டவேணும்.

இத்தகைய பல நல்ல ஒழுக்க நெறிகளைப் பின்பற்றி ஒவ்வொருவரும் வாழ முயன்றால் எமது சமூகம் மேம்படும் அவ்வாறு "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்பதை நாமறிவோம். ஆகவே மனிதன் என்பவன் தெய்வம் ஆகலாம் தன்னைப் பண்படுத்திய கல்வியறிவின் துணையினால் என்பதை உணர்வோம். இந்த அடிப்படையில் யாமும் எமது சமுதாய மேம்பாடு பற்றிச் சிந்திப்போம்; முயல்வோம், பலன் பெறுவோம்!

*திருமதி ச. கனகரத்தினம்*
*(பழைய மாணவி)*

# அழியாத கோலங்கள்

யாழ் நகரத்தில் நான் பிறந்த போதும் விதியின் பயனாக கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் எட்டு ஆண்டுகள் வரை கல்வி கற்க நேர்ந்த அனுபவங்கள் இன்னும் அழியாத கோலங்களாக மனதில் நிழல் ஆடுகின்றன. கிராமத்து வாசனை மறக்க முடியாத ஒன்று. நான் படித்த காலங்களில் அதிபர்கள் சின்னையா சிவனேசன். செல்வரட்ணம். திருமதி அருள்ராஜா, திரு. இராஜரட்ணம் ஆகியோர் அதிபர்களாக கடமையாற்றி இருந்தார்கள். அ. சிவனேசன் அவர்கள் விஞ்ஞான பாடத்தை அருமையாக சொல்லித்தருவார். திருமதி அருள்ராஜா அவர்கள் தமிழ்பாடம், சமூகக்கல்வி பாடங்களை கண்டிப்புடன் கற்றுத்தந்தார். அதிபர் இராஜரட்ணம் அவர்கள் இலகுவாக ஆங்கில பாடத்தை நகைச்சுவையுடன் புகட்டினார். இவர்களை குரு என்ற ஸ்தானத்தில் என்றுமே என்னால் மறக்க முடியாதவர்கள். இவர்களின் காலத்தில் நான் பெற்ற பல வெற்றிகள் கல்வி, விளையாட்டுப் போன்றவை தற்போதும் என்னை ஒரு உற்சாகமான சிறந்த மனிதனாக ஆக்கி வைத்துள்ளது.

1984 ன் பின் நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலைகளாலும் உயர்கல்வி படிப்பினாலும், தொழில்களாலும் பாடசாலையுடன் எனக்கிருந்த தொடர்புகள் அற்றுப் போயின. பின் 2000ம் ஆண்டளவில் தங்கவடிவேல் அவர்கள் என்னை அழைத்துச் சென்று தற்போது அகால மரணமடைந்த எனது அன்பிற்கும், மதிப்புக்கும் உரிய அதிபர் திரு. ந. சிவகடாச்சம் அவர்களுடன் அறிமுகம் செய்து வைத்து பழைய மாணவர் சங்கத்துடனும் இணைத்து விட்டார். பின் உறுப்பினராக இருந்த காலத்தில் 2002ல் 150 ஆவது ஆண்டு விழாவில் அதிபர்கள் அயராது பாடுபட்டு ஞாபகமாக ஒரு கட்டிடத்தையும் அமைத்து விழாவினையும் சிறப்பாக நடத்தி முடித்தார். இதன் பின் நான் மூன்று தடவையாக பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளராக தெரிவு செய்யப்பட்டேன். அப்போது அவர் என்னைவிட வயதில் மூத்தவராக விளங்கிய போதிலும் என்னுடன் ஓர் சகோதரன் போன்றே பழகுவார். என்னை கியூபேட் என்று பெயர் சொல்லி அழைப்பது இப்போதும் என் காதில் ஒலிக்கின்றது. மழை வெயில் பாராது செயலாளர் விநாயக லிங்கத்துடன் எனது வீட்டிற்கு வந்து, பாடசாலை அபிவிருத்தி பற்றி கலந்துரையாடுவது, வங்கி செயல்பாடுகளிற்கு செல்வது யாவற்றிலும் பின் நிற்கமாட்டார். நான் கண்ட அதிபர்களில் வீடு செல்லாது நீண்டநேரம் பாடசாலையில் நேரத்தை செலவிட்ட அதிபர் எனில் எமது அதிபரே ஆவர். 1984ற்கு பின் நாட்டு சூழலால் பாழடைந்த பாடசாலைபோன்று இருந்த பாடசாலையை இன்று கல்வித்துறை, கட்டிட வசதிகள், அழகாக காட்சி தரும் மைதானம், பூந்தோட்டம் யாவற்றையும் மேன்மை நிலைக்கு கொண்டு வந்த பெருந்தகை ஆவார். பருத்தித்துறை பஸ்சில் செல்லும் போது பார்த்தால் எமது கல்லூரியின் அழகே தனி அழகு இவ்வாறு கல்வி சமூகத்திற்காக தனது வியர்வை சிந்தியவரின் உடல் வீதியில் அனாதரவாக கிடந்தது என்பதனை அறிந்த போது நான் அடைந்த வேதனைக்கு அளவு இல்லை. அடிக்கடி சொல்லுவார் "சிவகடாச்சம் செத்துப் போகலாம் கிறிஸ்தவ கல்லூரி சாகாது கதைப்பவர்கள் நேரடியாக என்னிடம் கதைக்கலாம் வெளியில் திரிந்து கதைக்க வேண்டாம் என்றும் கூறுவார். எனவே அவருடன் பழகிய நாட்களும், அவர் மறைவும் என்றும் என் சிந்தனையில் அழியாத கோலங்களாகப் பதிந்துள்ளன.

*கி. ஆனந்தராஜன் B.A*
*பழைய மாணவர் சங்க பொருளாளர்,*
*(கிராம அலுவலரும், அரசியல் விரிவுரையாளரும்,*
*அகில இலங்கை சமாதான நீதிவானும்)*

# கிடைத்தற்கரிய என் உளம் நிறைந்த நண்பன்

யாழ் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் அதிபராகவும், தமிழ்த்தேசியப் பேரவையின் தலைவராகவும் கடமையாற்றிய திருவாளர் நடராசா திரு. ந. சிவகடாட்சம் அவர்கள் ஒக்ரோபர் பதினொராந் திகதி இரவு அகால மரணமெய்திய செய்தி கேட்டுத் திடுக்குற்றுக் கதிகலங்கினேன். என்ன செய்வதென்றறியாது வேதனைப்பட்டேன். ஏன் கல்வியியலாளராக என் உளம் நிறைந்த நண்பனாக, செயல் வீரனாகத் திகழ்ந்த ஒரு மாமனிதனுக்கா இக்கதி நேர்ந்தது என்பதை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. காலன்தான் பதில் சொல்ல வேண்டும்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த அதிபர் திரு. ந. சிவகடாட்சம் அவர்கள் தற்போது வானுறையும் தெய்வமாகிவிட்டார். அன்னார் கல்லூரிக்கும் சமூகத்திற்கும் ஆற்றிய சேவைகள் அளப்பரியன. "எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி நல்லை வாழிய நிலனே" என்பது ஔவையாரின் வாக்கு. ஒரு கிராமத்தின் அல்லது நாட்டின் பெருமை அந்நாட்டிலே தோன்றிய பெரியார்களால் தான் நிலை நாட்டப்படுகிறது. தான் வாழ்ந்த காலத்தையும் தமது சூழலையும் சிந்தித்துச் செயலாற்றியவர் அமரர் திரு. ந. சிவகடாட்சம் அவர்கள். கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு மேலாக நான் அவருடன் நெருங்கிப் பழகியிருக்கிறேன். அவரது சொல், செயல், நடை யாவும் என்னைக் கவர்ந்தது. அதனால் நாமிருவரும் நெருங்கிய நண்பர்களானோம். கல்லூரியில் நிகழும் எந்தப் பொது விடயங்களுக்கும் என்னை அழைத்துக் கலந்துரையாடுவார். பழைய மாணவர் சங்க உபதலைவர் என்ற முறையிலே நான் அவருடன் இணைந்து கருமங்களில் ஈடுபடுவேன். அதற்காக அவர் என்னை நன்றி பாராட்டுவதுமுண்டு.

நல்லூர்ப் பதியைப் பிறப்பிடமாகவும் வடகோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் திரு. ந. சிவகடாட்சம் அவர்கள் பிறந்த இடத்திலும் பார்க்கத் தாம் புகுந்த இடத்துக்கே அதிக மதிப்பளித்து அரிய சேவையாற்றியிருக்கிறார். இன்றைய உலகளாவிய மனிதத்துவ வாழ்வுக்குக் கல்வியும் சமூக சேவையுமே இன்றியமையாதன. இவ்விரண்டையும் தமது இரு கண்களாகக் கொண்டு இரவு பகல் அறியாது அரும்பணி ஆற்றியவர் அமரர் திரு. ந. சிவகடாட்சம் அவர்கள். எமது கிறிஸ்தவ கல்லூரியின் அதிபராகப் பொறுப்பேற்ற நாள் தொடக்கம் இறுதி மூச்சுவரை அன்னார் ஆற்றிய அதிவலுவுள்ள அரும் பணிகளை யாரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. அன்பும் அடக்கமும் நேர்மையும் இரக்க சுபாபமுடைய அரிய நண்பனை யான் இம்மையிலுஞ் சரி மறுமையிலுஞ் சரி மறப்பதற்கில்லை.

சூரிய உதயத்தையும் மறைவையும் நோக்காது கல்லூரியின் வளர்ச்சிக்காக இரவு பகலாக அரும்பாடுபட்ட அமரரவர்கள் எதனையும் நன்கு திட்டமிட்டுச் செம்மையாகச் செய்பவர். போர்க்காலச் சூழலில் நாட்டில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் சிதறியிருந்த கல்லூரி வளங்களை மீண்டும் சீர்செய்து வளம்படுத்திய பெருமைக்குரியவர். சிதைவுற்றிருந்த கல்லூரி நூலகத்தைச் செம்மைப்படுத்திக் கற்றறிந்த அறிஞர்களிடம் இலவசமாக நூல்களைப் பெற்று நிறைவுபடுத்தி மாணவர்களையும் பெற்றோரையும் மற்றோரையும் வாசிப்பில் ஈடுபடுத்தி அறிவைப் பெருக்க வழி காட்டியவர். தமது கல்லூரியில் கற்று வெளியேறி வெளிநாடுகளில் பணிபுரியும் பழைய மாணவர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, அவர்கள் மூலம் நிதியைப் பெற்றுக்கல்லூரியின் முக்கிய தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தவர். அத்துடன் நின்று விடாது வெளிநாட்டு நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று கல்லூரிக்குத் தேவையான தளபாட உபகரண வசதிகளை ஏற்படுத்திய பெருமையும் அமரரையே சாரும்.

தற்கால நிலமைக்கேற்ற வகையில் நவீன கற்றல் கற்பித்தல் முறைகளுடன் தமது மாணவர்களையும் வளர்ப்பதற்காகக் கணனி வசதிகள், ஒளி ஒலி உபகரண கூடங்களையும் ஏற்படுத்தி அறிவைப் பெருக்க அரும்பாடுபட்டவர். கல்வி அறிவோடு நல்லொழுக்கம் பற்றியுணர்வும் கொண்டு மாணவர்களை உருவாக்க வேண்டுமென்ற சிந்தனையுடன் செயற்பட்டவர் அமரர் திரு. ந. சிவகடாட்சம் அவர்கள்.

"எண்ணிய எண்ணியாங்கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்"

என்ற வள்ளுவர் வாக்குக்கமையத் திண்ணியராகக் கடமை உயர்ச்சியோடு வாழ்ந்த அன்னாரைக் கயவர்கள் வடிவில் காலன் உயிரைப் பறித்தெடுத்தான். இக்கொடூரச் செயல் என் உள்ளத்தைப் பெரிதும் வாட்டியுள்ளது. அன்னாரின் அரும்பிரிவால் துன்புற்றுத் துடிக்கும் குடும்பத்தினருக்கும் கல்லூரிச் சமூகத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா ஆண்டவனின் பாதங்களிற் சாந்தியடைப் பிரார்த்திக்கின்றேன்.

"நெலுநல் உளனொருவன் இன்றிலை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு"

*திரு. நா. சுந்தரலிங்கம்*
*உபதலைவர்*
*பழைய மாணவர் சங்கம்*

உ
சிவமயம்

# என் அன்பிற்குரிய அதிபர்

மறைந்த அதிபர்கள் நினைவு தினத்தில் வெளியிடும் "சுவடு" கையடக்கப் பிரதியில் என் அன்புக்குரிய அதிபர் திரு. ந. சிவகடாட்சம் அவர்களும் வெகு சீக்கிரத்தில் இடம் பிடித்தது மிகவும் வேதனையாக இருக்கிறது. என் அன்புக்குரிய அதிபர் எனது மனதிற்கு தந்த அதிபர் வரிசையில் முதலிடம் பெற்றவர் திரு. ந. சிவகடாட்சம் அவர்கள் தான். நான் நீண்ட நாட்கள் தொடர்ந்து கிறிஸ்தவகல்லூரியின் செயற்பாடுகளில் இணைந்திருக்கிறேன். கல்வி கற்ற காலம் 1958 - 1967 வரை அதைத் தொடர்ந்து இன்றுவரை பழைய மாணவர் சங்கத்தினூடாக செயற்பட்டு வந்துள்ளேன் எனது பழைய மாணவர் சங்கத் தொடர்புகளுக்கு உந்து சக்தியாக விளங்கியவர் விளங்குபவர் திரு. குமாரசாமி தங்கவடிவேல் அண்ணை என்றால் மிகையாகாது. எனது பழைய மாணவர் சங்க உறுப்பினர் காலத்தில் 1995-2005 வரையான காலம் பொற்காலம் தான். ஏன் என்றால் என் அன்புக்குரிய அதிபர் திரு. ந. சிவகடாட்சம் அவர்கள் தான். இக்கால கட்டத்தில் தான் 150 வது ஆண்டு நிறைவு விழா அதிபர் அவர்களின் முழுக்கண்காணிப்பிலும் முழு முயற்சியிலும் தான் செயல்பட்டது. எனது சகோதரன் பரிபூரணானந்தன் பாரிசிலிருந்து வந்தபொழுது வீட்டே வந்து அவரை சிறப்பு விருந்தினராக வரும்படி அழைத்து அந்நிகழ்வை வீடியோ பிரதி பண்ணி பாரிஸ் நகரில் பழைய மாணவர் அனைவரையும் பார்க்க வைத்தார். எனது சகோதரி திருமதி நித்தியானந்தி தயாநிதியின் மகன் கௌதமனின் பரதநாட்டிய நிகழ்ச்சியை 150 வது ஆண்டு நிகழ்வில் ஒரு நிகழ்வாக நடாத்திப் பெருமைப்படுத்தினார். என்னில் வைத்த அன்பும் நன்மதிப்பும் தான் இதற்குரிய முதற்காரணம் அத்துடன் எங்கள் குடும்பத்தை கல்லூரிச் சமூகத்துடன் இணைத்து கல்லூரிவளத்தை வளர்த்தவர். அத்தோடு எனது மூத்தமகனின் (19-08-2004) திருமண வைபவத்தில் கல்லூரிச் சமூகத்துடன் சமூகம் தந்து சிறந்த பரிசும் வழங்கி வைபவத்தைச் சிறப்பித்தவர். எதை யார் கேட்டாலும் இல்லை, செய்ய முடியாது, பார்ப்போம் என்ற கதைக்கே இடமில்லாமல் எதையும் நிறைவேற்றும் தற்துணிவாளன் - கடைசியாக நான் அதிபரை சந்தித்த நாள் 18-08-2005 அன்று ஒரு கையெழுத்து வேண்டச் சென்றேன். பாடசாலை வாங்கில் கால் மேல் கால்போட்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தார். என்னைக் கண்டதும் முழுமனத்துடன் சிரித்துக் கொண்டு அண்ணை வாங்கோ என்ன செய்யவேணும் என்று கேட்டு மகிழ்வுடன் கதைத்து கையெழுத்திட்டு தந்தார். நானும் அதிபர் கையால் வேண்ட வேணும் என்ற அவாவுடன் தான் சென்றிருந்தேன். அதிபருடைய சமாதான நீதிவான் இலச்சினை தேய்வடைந்து காணப்பட்டது. சேவையின் ஓய்வுக்கு முன்னமே அறிகுறியா என்று என் மனம் ஓலமிடுகிறது. காலம் காலமாக அதிபர் **E.C.A** நவரத்தினராஜாவைப் புகழ்ந்த எனது மனது ஏன் திரு. ந. சிவகடாட்சம் அதிபரை புகழவில்லை என்று என்மனம் அடிக்கடி அலட்டிக் கொண்டது. அதற்கான காலம் அவர் மறைந்த பின் வந்ததை நினைத்து மிகவும் வேதனைப்படுகிறது கலங்குகிறது. அதிபர் இல்லாத கிறிஸ்தவகல்லூரி வெறுமையாக இருப்பதுபோல் பிரமையூட்டுகிறது. அதிபர் இறந்தபின்பு நடந்த முதலாவது நிர்வாகசபைக் கூட்டத்தில் கலங்கிய கண்ணுடனும் கம்மிய குரலுடனும் தான் பேச முடிந்தது. உண்மையில் முந்திய ஆர்வத்துடன் கல்லூரிக்குள் செல்ல முடியவில்லை. 11.10.2005 அன்று அதிபரது மரணச் செய்தி திரு. விவேகானந்தன் ஆசிரியர் மூலம் வேலைக்குச் செல்லும் பொழுது தெரிந்து திகைத்துப் போனேன் என்றும் என் அன்புக்குரிய அதிபர் எங்களுடன் சீவிக்கின்றான் என்றால் அதிபரின் சேவையையோ ஆளுமையையோ அன்பையோ மறக்கவே முடியாது அதிபர் திரு. ந. சிவகடாட்சம் சிவனுடன் சேர்ந்து நித்திய வாழ்வு வாழ என் பிரார்த்தனைகள்.

*உபதலைவர்*
S. *பரமானந்தன்*

# ஐயா நீர் உறங்கவில்லை

அன்றும் இன்றும் என்றும் எம் இதயத்தில் நிலைத்தவராய் பத்தரை மாற்றுத் தங்கமென இப்புவியில் உதித்தவரே! அரை நூற்றாண்டு காலம் வாழ்ந்த அற்புதமான பொற்புதரே! கல்விச் சமூகம் உயர்ந்திட அயராது உழைத்த அதிபரே! அமரகாவியமே!...

ஐயா நீர் உறங்கவில்லை. சிவன் அருள்சிலிர்க்கும் சிரித்தமுகத் தோனாய் சீர்வரிசைத் தங்கோனாய் தரணி போற்றிடும் சீரிய பண்பாளரே! புண்ணிய கோடி... ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தவனன்றோ. கற்பகத்திற்கு ஏற்புடையவராய் கலையகம் நிலைய வளர்ச்சியில் என்றும் கரிசனை கொண்டு போசகரானவரே!

ஐயா நீர் உறங்கவில்லை. மின்னாமல் முழங்காமல் வந்த ஆழிப்பேரலை அனர்த்தம் போல், அஞ்சாமல் தூங்காமல் சரித்திரம் பொறித்துச் சென்ற காவியமே!

சமகால சமூகத்திற்காய் முகமுயர்த்தி அகமகிழ்ந்து நெஞ்சிலே துணிவை உரமாக்கி எதிர்கால நற்சந்ததியை முன்னுணர்ந்து நின் சிந்தனைத் திறனில் அரங்கேற்றிய பணிகள் அதில் சந்தித்த தடைகள். உம் கடின உழைப்பால் நீர்கண்டவெற்றிகள் என்றுமே இத்தரையில் முத்திரை பதித்திடுமே!

ஐயா நீர் உறங்கவில்லை. கல்லூரிச் சமூகத்தின் அன்பை வென்றீர் ஆளுமைத் திறனை அள்ளிச் சொரிந்தீர். கார் கொண்ட மேகம் போல் கருணையோடு ஆற்றிய பணிகள் ஏட்டில் அடங்கா நம் கல்லூரி நூறுடன் ஐம்பது நலமான அகவையைக் கண்டு கழித்திட்ட விழா நாயகனாக உழைத்து நின்ற பெருமைதனை கல்லூரி அன்னையின் ஒய்யார அங்கங்கள் எடுத்தியம்புமே!

ஐயா நீர் உறங்கவில்லை தன்னடக்கம் தயவுடமை தற்துணிவு சான்றாண்மை தேசப்பற்றினை தெவிட்டாத செந்தமிழை அன்புடன் வளர்த்தெடுபணிக்கு முன்னுழைத்த மாசற்ற தொண்டனே சிந்தையும் செயலும் அதன் தெளிவும் உன் வழிவந்தன சிவன் கடாட்சமே!

ஐயா நீர் உறங்கவில்லை. ஆசிரியர் குழாமின் அன்பை பெற்று மாணவச் செல்வங்களை கல்வியுடன் நிர்வாக கட்டமைப்பை ஒருங்கிணைத்து புரிந்துணரச் செய்து பாடசாலை சமூகத்தின் ஒத்துழைப்பைப் பெற்று நலன்விரும்பிகளின் ஆலோசனைகளை ஏற்று பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினூடாக பெற்றோரை முதன்மைப்படுத்தி நீர் புரிந்த அபிவிருத்தித் திட்டங்களை முழுமை பெறச் செய்தீர் அவையனைத்தும் எமது கண்கள் உம் நினைவினூடாக கண்டு கழிப்புறுகின்றன அதுவே உம் உயிர்ப்பு.

ஐயா நீர் உறங்கவில்லை ஆசிரியத் தொழிலை ஏற்று இருபத்தி ஓர் ஆண்டுகளின் ஒன்பது ஆண்டுகளை கல்லூரி அன்னைக்கு தலைமைதாங்கி வழி நடாத்தியுள்ளீர்கள். இக்காலத்தில் நின்வாழ்வின் முடிவுரையை கல்லூரி அன்னையின் பாத காணிக்கையாக்கியுள்ளீர். இக்காலப்பகுதியில் முப்பதிற்கும் மேற்பட்ட கல்லூரி அபிவிருத்திக்கு முன்னின்றுழைத்தீர் புதிய கட்டிடங்கள் பழைய கட்டிட புனரமைப்பு புலமைப்பரிசில் நிதியங்கள் உயர்கல்வி வசதிகளுக்கு மாணவரை ஊக்குவித்தமை விளையாட்டுத்துறை வளப்படுத்தல் மாணவ மன்றங்கள் அமைத்து ஊக்குவித்தல் மாதம் ஒருமுறை பெற்றார் சந்திப்புகள் உருவாக்கிகுறை நிறைகள் கலந்துரையாடி மாணவர்களை கல்வியிலும் சுகாதார மேம்பாட்டிற்கும் வித்திட்டமை வரலாற்றுப் பெருமை சேர் பெரியார்களின் ஒவ்வொரு மாணவ மன்றங்களின் ஊக்குவிப்புடன் நிறுவியமை கிறிஸ்தவ இந்து பிரார்த்தனை மண்டபங்கள் 150 வருடத்தில் நிறுவி முன் மாதிரிக்கு வழி சமைத்தமை இப்படி பல முன்னேற்றமான திட்டங்களை வழங்கிய எனும் ஜனபந்து பட்டத்திற்குரியவரை என்றும் நினைவில் நிறுத்திடுவோம்.

*திரு. யோசேப் தாவீது*
*(செல்லக்கண்டு)*
*செயலாளர்*
*2001 - 2002 - 2003*

# "எழுந்து வந்து பதில் சொல்"
# கல்லூரி அன்னையுடன் உனக்கு என்ன உறவு?

நடராசா நாகரத்தினம் தம்பதியினருக்கு நீ "அருமைப்புதல்வன்"

நவநீதமணிக்கு நீ அன்புக் கணவன் ஆனால் கல்லூரி அன்னையுடன் உனக்கு என்ன உறவு?

பாடசாலை அதிபர் என்ற உறவு மட்டும் தானா?

இல்லை, இல்லை

நம்பவே மாட்டோம்

தாலி கட்டிய கணவனா? அல்லது கள்ளத் தொடர்புக் காதலனா? பொய் சொல்லி மழுப்பாதே எழுந்து வந்து பதில் சொல் கல்லூரி அன்னைக்கு நீ என்ன செய்தாய்?

எழுதுவதற்கு எழுது கோலும் போதாது காகிதமும் காணாது கல்லூரி அன்னை அவள் உனக்கு என்ன சொன்னாள்? வீட்டை மறந்து விடுதலை நாட்களையும் மறந்து பகற்பொழுது முழுவதையும் தன்னுடன் கழித்து இன்புற்றிருக்கச் சொன்னாளா தனிப்பட்ட சொந்த வாழ்க்கையில் உனக்கு பிள்ளைகள் மூன்று மட்டுமே கல்லூரி. அன்னையுடன் ஏற்பட்ட கள்ளத் தொடர்பினால் உனது குழந்தைகள் முப்பதினாயிரத்திலும் அதிகம் பொய் சொல்லி மழுப்பாதே உண்மையை ஒத்துக் கொள்.

*அன்புத் தம்பி*
*சு. சிவநேசராசன்*

# நெஞ்சில் நிலைத்த எமது அதிபர்

"நடனம் ஒரு கலை, நாடகம் ஒரு கலை" பாடசாலையை

நிர்வகித்து வளர்ப்பதும் ஒரு "சிறப்புக் கலை"

இக் கலையினுள் மூழ்கித் திளைத்து முன்னேற்றம் பல கண்டு மகிழ்ச்சியுற்ற "மாபெரும் கலைஞன்"

காலைப் பிரார்த்தனையில்

தொந்தி வயிற்றுப்பிள்ளையார் புகழ் ஒலிக்கும் போது நீ ஒரு "ஐங்கரநேசன்"

ஆண்டவன் யேசு புகழ் கேட்கும் போது நீ ஒரு "யேசுதாச"

மாணவர்களுக்கு "அன்புத் தந்தை"

ஆசிரியர்களுக்கு "அன்பு அண்ணன்"

கல்விச் செயற்பாடுகளைத் திட்டமிட்டு அமுல்படுத்தும்போது "திட்டமிடற் பணிப்பாளர்"

தமிழ்த்தின விழாவில் "வித்தியானந்தன்"

விஞ்ஞான தின விழாவில் "அப்துல்கலாம்"

விளையாட்டுப் போட்டியில் "டங்கன் வைற்"

கணிதப் புதிர்ப்போட்டியின் போது "இராமானுஜம்"

உலக சூழல் தினத்தில் "ஆதர் சி. கிளார்க்"

கட்டட வேலையை மேற்பார்வை செய்யும் போது "பில்டிங் ஓவசியர்"

பூந்தோட்டத்தை வடிவமைக்கும் போது "அழகுக்கலை நிபுணர்"

வறிய மாணவர்களுக்கு புலமைப்பரிசில் நிதியம் சேகரிக்கும் போது "ஒரு பிச்சைக்காரன்"

ஆண்டு தோறும் டிசெம்பர் 27 இல் அமரத்துவம் அடைந்த அதிபர் தினம்

கொண்டாடியபோது நன்றி மிகுந்த "ஒரு மனிதன்"

*நலன்புரிக்கழகம்,*
*யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.*

# கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி அன்னையின் நெஞ்சத்தில் அதிபர் சிவகடாட்சம்

* கல்லூரித் தாயின் வளர்ச்சியில் அதிபர் சிவகடாட்சம் செய்தவை பல மைல் கற்கள் அவற்றுள் சில துளிகள்

* 1995 இடப்பெயர்வின் பின்பு அன்னையின் காவலனாக அதிபர் பதவியை பொறுப்பேற்றமை.

* நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகளினால் குழம்பி இருந்த கல்லூரி வளங்களை மீண்டும் சீர்செய்து அன்னையின் வளர்ச்சிக்கு அடிக்கோல் இட்டமை.

* 125 வது நினைவு மண்டபத்தை **GTZ** உதவியுடன் நவீன வசதிகளுடன் கூடியதாக புனரமைத்தமை.

* சிதைவுற்றிருந்த கல்லூரி நூலகத்தை ஆண்டுதோறும் நூலக வாரம் பிரகடனப்படுத்தி ஒவ்வொரு புத்தகங்களாகச் சேகரித்து வளப்படுத்தியமை.

* நவரட்டணராஜா மண்டபத்தை மீண்டும் புனரமைத்து விஞ்ஞான ஆய்வுகூடம், சித்திர கலைக்கூடம் உருவாக்கியமை.

* வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக புலமைப்பரிசில் நிதியங்களை உருவாக்கியமை.

* கல்லூரி அன்னையின் 150 வது ஆண்டு விழாவினை மிகவும் சிறப்பாக முன்னின்று நடாத்தியமை.

* ஆண்டுதோறும் பல்கலைக்கழகத்திற்கு கலைத்துறை, வர்த்தகத்துறை, மருத்துவத்துறை, பொறியியல்துறை முதலிய துறைகளிற்கு அன்னையின் மைந்தர்களை அனுப்பி வைத்தமை.

* வெறுமனே ஏட்டுப்படிப்பு மட்டுமன்றி மாணவர்களை கல்வி, விளையாட்டு, கலை போன்ற பல்வேறுபட்ட துறைகளில் திறம்படுவதற்கு தனது தனித்துவ ஆளுமையை பயன்படுத்தியமை.

* இடப்பெயர்வின் பின்பு தற்காலிக கொட்டகைகளில் வசித்து வந்த கல்லூரி அன்னையை மாடிக்கட்டத்திற்குள் குடியேறச் செய்து பூ.க. இராசரத்தினம் மண்டபம், சிவனேசன் மண்டபம், சே. கந்தசாமி மண்டபம், சு. சிவசுப்பிரமணியம் மண்டபம், இராஜசேகரம் மண்டபம் என்பவற்றுடன் அத்திவாரத்துடன் கூடிய தற்காலிக கொட்டகை ஒன்றையும் அமைத்துக் கொடுத்தமை.

* அத்துடன் நின்றுவிடாது பல வெளிநாட்டு நிறுவனங்களின் உதவிகளைப் பெற்று கல்லூரிக்கு தளபாட உபகரண வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தமை.

* 125 வது நினைவு மண்டபத்திற்கு கதிரை, தளபாட வசதிகளை செய்தமை.

* நாட்டுச் சூழ்நிலைகளால் குறைந்திருந்த மாணவர் வரவை மேம்படுத்துதற்காக தனது தனித்துவ திட்டமிடல் அறிவைப் பயன்படுத்தி சிறப்பான ஆளுமையுடன் மாணவர் வரவை **90%** இலும் கூடுதலான பெறுமானத்திற்கு அதிகரித்தமை.

* ஒவ்வொரு பாடத்திற்கும் உரித்தான மன்றங்களை அமைத்து மாணவர்களது தலைமைத்துவ பண்புகளை வளர்த்தமை.

* கல்லூரிச் சூழலில் கற்றலுக்கான கவின்நிலையை உருவாக்குவதன் கட்டமாக திருவள்ளுவர், ஔவையார், சி. வை. தாமோதரம்பிள்ளை ஆகிய அறிஞர்களின் உருவத்தை சிலையாக வடித்தமைத்துடன் தமிழ்த்தாயையும் என்றும் நினைவு கூர வைத்தமை.

* நவீன அறிவியல் வளர்ச்சிக்கு எமது மாணவர்களையும் கொண்டு செல்லும் வகையில் நவீன நூலகத்தை அமைத்தமை.

* நவீன கற்றல் கற்பித்தல் முறைகளுடன் எமது மாணவர்களையும் வளர்ப்பதற்காக கணனி வசதிகள் ஒளி, ஒலி உபகரண கூடங்களையும் உருவாக்கியமை.

* கல்வி வளர்ச்சிக்கு சமாந்தரமாக விளையாட்டுத்துறையையும் வளர்த்து கல்லூரி மைந்தர்களை தேசிய மட்ட போட்டி வரை கொண்டு சென்றமை. அத்துடன் தரம்மிக்க கூடைப்பந்தாட்ட, வலைப்பந்தாட்ட, உதைப்பந்தாட்ட மைதானங்களை அமைத்தமை.

* **200M** ஓட்டப்பாதையை அமைக்கக் கூடிய வகையில் மைதானத்தை விஸ்தரித்தமை.

* பாடசாலையின் உள்ளக மன்றங்களின் போட்டிகள் தொடக்கம் கோட்ட, வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்ட போட்டிகளிலும் மாணவர்கள் பரிசில் பெற வழிப்படுத்தியமை.

* பாடசாலைக்கு முச்சக்கர வண்டி (ஓட்டோ), ஒலிபெருக்கி, போட்டோ பிரதி பண்ணும் இயந்திரம் போன்ற உபகரணங்கள் பெற்றுக் கொடுத்தமை.

* பாடசாலையில் நவீன முறையில் மாணவர்களுக்கு நீர்த்தாங்கிகளை அமைத்து குடிநீர் வசதியளித்ததுடன், 5 மலசலகூட தொகுதிகளையும் அமைத்தமை.

* பாடசாலை பின்புறவாயிலினூடாக ஆசிரியர்கள், மாணவர்கள் இலகுவாக வந்தடையும் முகமாக அகலமான பாதையொன்றை தனது சொந்த காணியினூடாகவே திறந்து விட்டமை.

* தேவாலயத்திற்கும் பாடசாலைக்குமிடையில் இடிந்து விழுந்து கிடந்த மதிலை பழைய மாணவர் சங்க உதவியுடன் கட்டியமை.

* கட்டடங்களை அமைப்பதுடன் மட்டும் நின்று விடாது அவற்றை அழகுபடுத்த பூந்தோட்டங்களையும் அமைத்தமை.

* கல்லூரியில் சைவசமய, கிறிஸ்தவ சமய பிரார்த்தனைகளுக்காக தனித்தனி ஆலயங்களினை அமைத்தமை.

* கல்லூரியில் நிழல் தரும் பெருவிருட்சங்களையும், பயன்தரும் மரங்களையும் நாட்டியமை.

* கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலகம் இயங்குவதற்காக தனியான கட்டடம் ஒன்றை அமைத்து கொடுத்தமை.

எமது அன்னைக்கு அதிபர் சிவகடாட்சம் செய்தவை அளப்பரியன. அவற்றுள் சிலவே மேற்கூறியன அதிபர் சிவகடாட்சத்தை கல்லூரி அன்னை என்றும் தனது நெஞ்சத்தில் நிலைநிறுத்தி வைத்திருப்பாள் என்பது உறுதி.

*கல்லூரிச் சமூகம்*
*யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி*

# நினைத்ததை முடித்தவர்


கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் ஆரம்ப காலம் தொடக்கம் கடமை புரிந்த அதிபர்களால் எங்கள் மதிப்புக்குரிய அமரர் திரு. நடராசா சிவகடாட்சம் ஓர் செயல் வீரர் அவருடைய காலத்தில் பல தடங்கல்கள். போர். மக்கள் இடம்பெயர்வு இருந்தபோதும் கல்லூரியை முழு அளவில் பரிணமிக்கச் செய்தவர் என்றால் அது மிகையாகாது. இது அவருடைய பெரும் ஆளுமைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு. சக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடைய முழு ஆதரவையும் பெற்ற காரணத்தால் கல்லூரிக்கு வேண்டிய சகல உதவிகளையும் அவர் கேட்க முந்தி மக்கள் முன்வந்து செய்தார்கள் அத்துடன் பழைய மாணவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களை அங்கத்தவர்களாக்கி அவர்களுடைய அன்பையும் ஆதரவையும் பெற்றவர். பலதுறைகளிலும் நிபுணத்துவம் கொண்டவர். எந்தெந்த வேலைகளை யார் யார் மூலம் செய்ய முடியுமோ எனத்தெரிந்து அவர்கள் மூலம் அந்தந்த வேலைகளை ஒப்பேற்றினவர். வீட்டில் இவரைச் சந்திக்க முடியாது. கல்லூரியில்தான் காணமுடியும். இவர் அன்புக்குரிய மனைவி இவருக்கு ஓர் உந்துசக்தியாய் இருந்து இவருடைய செயற்பாடுகளுக்கு மிகவும் உதவியர் இதுவும் ஓர் காரணம் இவருடைய வெற்றிற்கு இவருடைய இழப்பை வேறு ஒருவர் நிரப்பமுடியாது. கோப்பாய் மக்கள் மனதில் இவருடைய நினைவு என்றும் நிலைத்து நிற்கும்.

*பழைய மாணவன்*
*வ. நடராசா*

# நன்றி நவிலல்

இச் "சுவடு" சஞ்சிகைக்கு ஆக்கங்கள் தந்து உதவியவர்க்கும், இச்சஞ்சிகையை அச்சுப்பதித்து வழங்கிய குரு பிறிண்டேர்ஸ் நிறுவன உரிமையாளர், பணியாளருக்கும் இன்றைய நிகழ்வில் பங்கேற்று சிறப்பித்த அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பத்திராதிபர்.



Guru Printers,56,AdiyapathamVeethy,Thiruneively.